பக்கம்.4

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.4/2016

பி. வா.சா.– 2– பாலமுருகன் , த/பெ.சுப்பிரமணி

நாள். 12.02.2026

மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் பி.வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

2,3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. 2ம் பிரதிவாதி கலையரசி கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிகிறேன். வாதிகள் பிரதிவாதிகள் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் தற்போது கோவிந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். 3 வருடமாக குடியிருந்து வருகிறேன். 2,3 பிரதிவாதிகளை சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்த்த பின்புதான் எனக்கு தெரியும். 2ம்பிரதிவாதி கருப்பாயி என்ற கலையரசியின் குடும்பம் மற்றும் வாரிசு பற்றி எனக்கு தெரியாது. என் சகோதரர் அங்குராஜ் தற்போது இறந்து விட்டார். என் சகோதரர் அங்குராஜ் கிழக்கு கோவிந்தாபுரத்தில் பத்திர எழுத்தராக இருந்து தனியாக அலுவலகம் வைத்திருந்தார். அங்குதான் பத்திரங்கள் தயார் செய்து கையெழுத்து வாங்குவது வழக்கம் ஆகும். எனது அண்ணனுக்கு வேறு எதுவும் பத்திர அலுவலகம் கிடையாது. நான் எனது அண்ணனுக்கு உதவியாளராக 15 வருடமாக இருந்தேன். என் அண்ணன் அலுவலகத்தில் உதவியாளராக இருந்த படியால் அங்கு வருபவர்களுக்கு தெரிந்த நபர்கள் என்றால் நான் சாட்சி கையெழுத்து போடுவேன். 08.02.2010 தேதியிட்ட உயிலில் சாட்சி கையெழுத்து போட்டு பணம் வாங்கியுள்ளேன் என்றால் கையெழுத்திட்டுள்ளேன், பணம் வாங்கவில்லை. உயில்சாசனம் எந்த தேதியில் யார் சொல்ல சொல்ல தயாரிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் கடந்த 08.02.2010 ஆறுமுக கவுண்டர் சொல்லி எனது அண்ணன் தயார் செய்தார். உயில்சாசனத்தின் உயில் மதிப்பு எவ்வளவு என்று குறிப்பிட்டுள்ளார்கள், அது பற்றி எனக்கு தெரியாது. உயில்சாசனம் எவ்வளவு மதிப்பு பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் காங்கர் சீட்டில் எழுதப்பட்டது. ஆறுமுக கவுண்டர் அதில் கைரேகை வைத்தாரா அல்லது கையெழுத்திட்டாரா என்றால் கையெழுத்திட்டார். தமிழில் கையெழுத்திட்டார். எங்கள் பத்திர

அலுவலகத்தில் பிரதிவாதிகள் என்னென்ன வகையான ஆவணங்கள் எழுத வருவார்கள் என்றார் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சம்மந்தப்பட்ட உயில் எழுதும் போது யார் உடன் வந்தார்கள் என்றால் கலையரசி, பானுப்பிரியா இருந்தார்கள். உயில் எழுதிய சமயத்தில் நான் எந்தவித ஆவணங்களையும் நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர் தெளிந்த சிந்தனையில் இல்லை என்பது தெரிந்து பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து மேற்படி உயிலை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. உயில் எழுதுவதற்காக தொகையை பெற்றுக் கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:12:26 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.